சுருக்கம்

உயர்கல்வித் துறை - 2021-22 ஆம் ஆண்டு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் - சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் 4 புதிய மண்டல மையங்கள் நிறுவுதல் - நிர்வாக அனுமதி - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (கே1) துறை

அரசாணை (நிலை) எண்.192

நாள்: 11.10.2021.
பிலவ, புரட்டாசி 25
திருவள்ளுவராண்டு, 2052

படிக்கப்பட்டவை :

1. 2021-22 ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.20, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 26.08.2021.
2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். ததிநிபக/மமை/அரசு-68/2021, நாள் 15.09.2021

-----

**ஆணை:**

26.08.2021 அன்று 2021-22-ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் மற்றவைகளுக்கிடையே பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

"தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தற்போது 8 மண்டல மையங்கள் வழியாக கல்விச்சேவை வழங்கி வருகிறது. மேலும், கூடுதலாக 4 புதிய மண்டல மையங்கள் ரூ.1 கோடி செலவில் சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அமைக்கப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், அப்பல்கலைக்கழகத்தில், புதிதாகத் தொடங்கப்படவுள்ள ஒவ்வொரு மண்டல மையமும் கீழ்க்காணும் மாவட்ட எல்லைகளைக் கொண்டு செயல்படும் என்று தெரிவித்துள்ளார் :-

| வ. எண். | மண்டல மையங்கள் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| 2. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் |
| 3. | மயிலாடுதுறை | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை |
| 4. | சிவகங்கை | சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் |

மேலும், இதற்கான முதல் இரண்டு வருடங்களுக்கு உத்தேச, தொடர் மற்றும் தொடராச் செலவினங்கள் பின்வருமாறு, என்றும் தெரிவித்துள்ளார் :-

| வ. எண். | விவரங்கள் | செவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| (அ) | **தொடர் செலவினங்கள்** | |
| | பணியாளர் தொகுப்பூதியம் | 76,80,000 |
| | பராமரிப்பு செலவு | 18,24,000 |
| | **தொடர் செலவினங்கள் மொத்தம்** | 95,04,000 |
| (ஆ) | **தொடராச் செலவினங்கள்** | |
| | உள்கட்டமைப்பு வசதிகளுக்கான செலவுகள் (அறைகலன்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள்) | 4,96,000 |
| | **தொடராச் செலவினங்கள் (மொத்தம்)** | 4,96,000 |
| | **மொத்த செலவினம் (அ+ஆ)** | 1,00,00,000 |

3. அத்துடன் அவர், இத்திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கையினையும் அனுப்பியுள்ளார். அதில் பிறவற்றுடன் மேற்கண்ட 4 மண்டல மையங்களை உருவாக்கி அதன் தொடக்க செயல்பாட்டிற்கென முதல் 2 வருடங்களுக்குப் பல்கலைக்கழக நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி செலவிடப்படும் என்றும், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒவ்வொரு மண்டல மையமும் தன்னாட்சி (Autonomous) பெற்ற மண்டல மையமாக அங்கீகரிக்கப்படும் என்றும், இதனால் ஒவ்வொரு மண்டல மையமும் அனைத்து நிலைகளிலும் தன்னிறைவு பெற்ற மண்டல மையமாக அமையும் என்றும், உறுப்பு சமுதாயக் கல்லூரி, மண்டல மைய கற்போர் உதவி மையம் மற்றும் மண்டல மைய திறன் மேம்பாட்டு மையம்

ஆகிய மூன்று அமைப்புகளின் செயல்பாடுகள் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயைக் கொண்டு எதிர் வரும் காலங்களில் ஏற்படும் தொடர் மற்றும் தொடராச் செலவினங்களை ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளதுடன், மேற்காணும் திட்ட அறிக்கைக்கு உரிய நிர்வாக ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் 4 புதிய மண்டல மையங்களை ரூ.1.00 கோடி செலவில் சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமைப்பதற்கு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில (தணிக்கை-1) கணக்காயர், சென்னை-18.
உள்ளுறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

<u>நகல்:</u>
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/10/2021
பிரிவு அலுவலர்
12.10.21